RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-24 | 24 ஜனவரி | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## திமுக எம்.பி. கதிர் ஆனந்தை 8 மணி நேரம் கேள்விகளால் துளைத்தெடுத்த அமலாக்கத்துறை

வேலூர், ஜன.24

2019ம் ஆண்டு மக்களவை தேர்தலில் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.11 கோடி பணம் தொடர்பாக, கடந்த 3ம் தேதி நடந்த அமலாக்கத்துறை சோதனையை தொடர்ந்து, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த் நேற்று ஆஜரானார். அவரிடம் 8 மணி நேரத்துக்கும் மேலாக விசாரணை நடைபெற்றது.



கடந்த 2019ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது வேலூர் தொகுதி வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பதுக்கி வைத்திருந்த ரூ.11 கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுதொடர்பாக, சட்டவிரோத பணப்பரிமாற்றம் தடுப்பு சட்டத்தின் கீழ் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனின் மகனும், வேலூர் தொகுதி எம்.பி.யுமான கதிர் ஆனந்த் தொடர்புடைய இடங்களில், கடந்த 3ம் தேதி அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையை மேற்கொண்டனர்.

காட்பாடியில் உள்ள எம்.பி. கதிர் ஆனந்தின் வீடு, கிறிஸ்டியான்பேட்டை பகுதியில் உள்ள கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரி, திமுக நிர்வாகி பூஞ்சோலை சீனிவாசன் என்பவருக்குச் சொந்தமான இடம் உள்ளிட்ட 8 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் தொடர் சோதனையில் ஈடுபட்டனர். தொடர்ந்து, 3 நாட்கள் நடைபெற்ற இந்த சோதனையில், பூஞ்சோலை சீனிவாசன் வீட்டில் இருந்து ரூ.28 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

அதேபோல், கிரிஸ்டியான் பேட்டை பகுதியில் உள்ள கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரியில் நடத்தப்பட்ட சோதனையில், ரூ.13.70 கோடி மதிப்பிலான சொத்து ஆவணங்கள், ரூ.75 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்திருந்தது. இந்நிலையில், பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக, விசாரணை நடத்த, அமலாக்கத்துறை அலுவலகத்தில் ஆஜராகும் படி கதிர் ஆனந்த் எம்.பி.க்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பியிருந்தனர்.

அதன்படி, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் கதிர் ஆனந்த் எம்.பி. நேற்று காலை 10.45 மணி அளவில் ஆஜரானார். அவரிடம் சோதனையின்போது பறிமுதல் செய்யப்பட்ட பணம், ஆவணங்களை காண்பித்து அது குறித்து விசாரணை நடத்தினர். மேலும், சில சொத்துகள் வாங்கப்பட்டது, சட்டவிரோதமான பணப்பரிமாற்றம் உள்பட பல்வேறு கேள்விகளை அதிகாரிகள் முன்வைத் துள்ளனர்.

அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்த கதிர் ஆனந்த், சில கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் தவிர்த்துள்ளார். சில கேள்விகளுக்கு தங்கள் தரப்பு நியாயத்தை முன்வைத்துள்ளார். கதிர் ஆனந்த் அளித்த தகவல்களை அமலாக்கத்துறையினர் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளனர். மேலும், வீடியோவாகவும் பதிவு செய்தனர். தேவைப்பட்டால், மீண்டும் அமலாக்கத்துறை அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என கூறி, விசாரணைக்கு பிறகு அவரை அனுப்பி வைத்தனர். இந்த விசாரணை 8 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## தமிழக காங்கிரஸ் தலைவர் சொல்வதை போல கச்சத்தீவை தாரைவார்த்தது ராஜதந்திரம் என்று முதல்வர் ஸ்டாலின் ஒப்புக்கொள்வாரா?

### அண்ணாமலை கேள்வி

சென்னை, ஜன.24

தமிழக காங்கிரஸ் தலைவர் சொல்வதை போல கச்சத்தீவை தாரைவார்த்தது ராஜதந்திரம் என்று முதல்வர் ஸ்டாலின் ஒப்புக்கொள்வாரா? என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுகுறித்த தனது எக்ஸ் தளத்தில் அண்ணாமலை வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை, கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுத்தது, மறைந்த இந்திரா காந்தியின் ராஜதந்திரம் என்று கூறுகிறார். எங்களுக்கு சில கேள்விகள்.

கடந்த 30 ஆண்டுகளில், இலங்கை அரசால், பல்லாயிரக் கணக்கான இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தான் அந்த ராஜதந்திரமா? பலநூறு இந்திய மீனவர்கள் நடுக்கடலில் சுட்டுக் கொல்லப்பட்டனரே. அதுவும் உங்கள் ராஜதந்திரம் தானா?


மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டதால் வாழ்வாதாரத்தை இழந்தார்கள் நம் தமிழக மீனவ சொந்தங்கள். இதுவும் ராஜதந்திரத்தில் தான் அடங்குமா? கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தபோது, அன்று தமிழகத்தில் ஆட்சியிலிருந்த திமுக, கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுக்க முழு சம்மதம் தெரிவித்துத் தமிழக மீனவ மக்களுக்குத் துரோகம் செய்ததோடு, கடந்த 50 ஆண்டுகளாக, ஒவ்வொரு தேர்தலின் போதும், தமிழக மீனவர்கள் பாதுகாப்பு, தமிழர்கள் உரிமை, என்றெல்லாம் நாடகமாடிக் கொண்டிருக்கிறது.

அப்போதெல்லாம் இந்த ராஜதந்திரத்தைப் பற்றித் திமுக காங்கிரஸ் கூட்டணி பேசியதில்லையே ஏன்? தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப்பெருந்தகை, சொல்வது போலக் கச்சத்தீவைத் தாரை வார்த்தது ராஜதந்திரம் என்று முதல்வர் ஸ்டாலின் ஒப்புக் கொள்வாரா? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பாலியல் குற்றங்களுக்கு கடும் தண்டனை: சட்டத்திருத்த மசோதாவுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல்

சென்னை, ஜன.24

சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமை மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் மீதான கூட்டு பாலியல் வன்கொடுமை குற்றம் செய்வோருக்கு அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டமசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.



தண்டனை விவரங்கள்: டிஜிட்டல் முறை, மின்னணு ரீதியான குற்றங்களுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம் என உள்ளது. இதை, முதல் தண்டனை தீர்ப்பின்பேரில் 5 ஆண்டு சிறை தண்டனை, ரூ.1 லட்சம் அபராதம் என நீட்டிக்கப்படும். இரண்டாவது அல்லது தொடர்ச்சியான தண்டனை தீர்ப்பின்போது 10 ஆண்டு சிறை தண்டனை, ரூ.10 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.

வன்கொடுமையால் ஏற்படும் மரணங்களுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை, ரூ.50 ஆயிரம் அபராதமும், மரணம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்படும் வன்கொடுமைகளுக்கு ஆயுள் தண்டனை, ரூ.50 ஆயிரம் அபராதம் என உள்ளது. தற்போது அது முறையே 15 ஆண்டு சிறை தண்டனை, ரூ.2 லட்சம் அபராதம் மற்றும் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை மற்றும் ரூ.2 லட்சம் அபராதம் என விதிக்கப்படும்.

கல்வி நிலையங்கள், விடுதி, திரையரங்கு, வணிக வளாகங்கள் போன்ற பொது இடங்களில் போதிய மின்விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும். குற்ற சம்பவங்கள் நடந்த 24 மணி நேரத்தில் காவல் நிலையங்களுக்கு தகவல் அளிக்க வேண்டும். புகார் அளிக்காமல் மறைத்தால் விதிக்கப்படும் ரூ.2 ஆயிரம் அபராதம் என்பது ரூ.50 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

அதேபோல, வன்கொடுமைக்கு 14 ஆண்டு கடுங்காவல் முதல் அபராதத்துடன் ஆயுட்கால சிறை தண்டனை. காவல் துறை அலுவலர், சிறைச்சாலை அலுவலர், அரசு அலுவலர், மருத்துவமனை பணியாளர் வன்கொடுமை குற்றவாளியாக இருந்தால் 20 ஆண்டு கடுங்காவல் முதல் ஆயுட்கால சிறை தண்டனை. 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியை வன்கொடுமை செய்தால் கடுங்காவல் தண்டனை அல்லது மரண தண்டனை. கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தால் அபராதத்துடன் கடுங்காவல் ஆயுள் தண்டனை. 18 வயதுக்கு உட்பட்ட பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தால் கடுங்காவல் ஆயுள் அல்லது மரண தண்டனை. மீண்டும் மீண்டும் குற்ற செயலில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அல்லது கடுங்காவல் ஆயுள் தண்டனை. பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளத்தை வெளிப்படுத்தினால் அபராதத்துடன் 3 முதல் 5 ஆண்டு வரை சிறை தண்டனை.

பெண்ணின் கண்ணியத்தை அவமதித்தல் அல்லது பலத்தை பயன்படுத்தி தாக்குதல் நடத்தினால் அபராதத்துடன் 3 முதல் 5 ஆண்டு வரை சிறை தண்டனை. பெண்ணை பின்தொடர்ந்தால் அபராதத்துடன் 5 ஆண்டு வரை சிறை தண்டனை. இதே குற்றம் தொடர்ந்தால், அபராதத்துடன் 7 ஆண்டு வரை சிறை தண்டனை. ஆசிட் வீசி கொடுங்காயம் ஏற்படுத்தினால் அபராதத்துடன் கடுங்காவல் ஆயுள் அல்லது மரண தண்டனை. ஆசிட் வீசுவதாக மிரட்டினால் அபராதத்துடன் 10 ஆண்டு முதல் ஆயுட்கால சிறை தண்டனை வரை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லாஸ் ஏஞ்சல்ஸில் மீண்டும் காட்டுத் தீ 30,000 பேர் வெளியேற்றம்

லாஸ் ஏஞ்சல்ஸ், ஜன.24

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மீண்டும் காட்டுத் தீ பரவத் தொடங்கியுள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கிருந்து 30 ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குப் பெயரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் அண்மையில் காட்டுத்தீ பரவியது. இதுவரை 40க்கும் மேற்பட்டோர் இந்தப் பேரிடரால் இறந்திருக்கிறார்கள். 12,000 கட்டிடங்கள் உள்படப் பல கட்டுமானங்கள் சேதமடைந்தன. 1.80 லட்சம் பேர் வேறு இடத்தில் தங்கவைக்கப்பட்டார்கள். 163 சதுர கிலோமீட்டர் பரப்பளவு தீக்கிரையானது. 200 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் (ரூ.17,29,581 கோடி) அதிகமான பொருள்சேதம் ஏற்பட்டது.

இந்நிலையில், சற்றே தணிந்த காட்டுத்தீ தற்போது மீண்டும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் வடக்குப் பகுதியில் தீ பரவி வருகிறது. இப்போது மூண்டுள்ள காட்டுத்தீ 21 சதுர கிலோமீட்டர் அளவில் எரிந்து வருகிறது. இதனால் விண்ணை முட்டும் அளவுக்கு கரும்புகை சூழ்ந்துள்ளது.

லாஸ் ஏஞ்சல்ஸ் காவல்துறை தலைவர் ராபர்ட் ஜென்சன் கூறுகையில், "கடந்தமுறை ஈட்டன், பாலிஷேட்ஸ் பகுதியில் காட்டுத்தீயால் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. அந்த படிப்பினையால் இம்முறை வடக்குப் பகுதியில் தீ பரவியவுடனேயே பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப் படுத்தினோம். முந்தைய பாதிப்பை சுட்டிக்காட்டியே மக்களை உடனடியாக வெளியேற உத்தரவிட்டோம். அரசு உத்தரவை சட்டை செய்யாமல் உடனடியாக வெளியேற ஊக்குவித்தோம்." என்றார்.

இதற்கிடையே, காட்டுத் தீயை அணைக்கும் பணியில் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தீயணைப்பு வீரர்களும் பணியை முடுக்கிவிட்டுள்ளனர்.

காரணம் என்ன? காஸ்டேயிக் ஏரியை ஒட்டிய பகுதியில் ஒரு சில மணி நேரத்துக்குள்ளேயே 5000 ஏக்கர் பரப்பளவில் காட்டுத் தீ பரவியுள்ளது. மீண்டும் இவ்வளவு வீரியமாகக் காட்டுத்தீ ஏற்படக் காரணம் இதுதான் என உறுதிப்படுத்தப்படவில்லை. இருப்பினும் காற்றில் குறைந்த ஈரப்பதம், பலமான காற்று ஆகியன மீண்டும் காட்டுத் தீ பரவக் காரணம் என்று கூறப்படுகிறது.

மக்கள் வீடுகளில் இருந்து பொருட்களை அள்ளிக் கொண்டு அவசர அவசரமாக புறப்படும் காட்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின. அப்போது ஒருவர், "என் வீட்டை இத்தீ கபளீகரம் செய்யாது என நம்புகிறேன். உயிருக்கு அஞ்சி இப்போது இடம்பெயர்கிறோம். மீண்டும் வரும்போது வீடு மிஞ்ச வேண்டும் என்று விரும்புகிறேன்." என்றார்.

## பொறியியல் படிப்புக்கான இணைப்பு அங்கீகார விதிமுறைகள் கல்லூரிகளுக்கு அண்ணா பல்கலை. எச்சரிக்கை

சென்னை, ஜன.24

பொறியியல் கல்லூரிகள் இணைப்பு அங்கீகாரம் கோரி விண்ணப்பிக்கும்போது போதுமான தகவல்களை தெரிவிக்காவிட்டால், அதன் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்று அண்ணா பல்கலைக்கழகம் எச்சரித்துள்ளது.




தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் பொறியியல் கல்லூரிகள் தங்கள் இணைப்பு அங்கீகாரத்தை ஆண்டுதோறும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னரே பொறியியல் கல்லூரிகள் மாணவர் சேர்க்கையை நடத்த முடியும். இதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்டு வருகிறது.

இதை முறையாக பின்பற்றும் கல்லூரிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். இந்நிலையில் நடப்பாண்டு கல்லூரிகள் அங்கீகாரம் அனுமதி பெறுவதற்கான ஏஎம்எஸ் (affiliated monitoring system) என்ற இணையதளமானது கூடுதல் அம்சங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பதிவாளர் சுற்றறிக்கை: இதுதொடர்பாக அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் ஜெ. பிரகாஷ், இணைப்பு கல்லூரிகளின் முதல்வர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: 2025 26ம் கல்வியாண்டில் பல்கலை.யின் இணைப்பு அங்கீகாரத்தை பெறுதல், நீட்டிப்புக்கான வழிமுறைகள் www.annauniv.edu/cai/index.php என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அதை பின்பற்றி அங்கீகாரம் கோரும் கல்லூரிகள் ஜனவரி 31ம் தேதி வரை விண்ணப்பிக்க வேண்டும். இந்த கால அவகாசத்தை தவறுபவர்கள் அபராதத் தொகையுடன் பிப்ரவரி 7ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

இதையடுத்து ஆதார் எண்ணுடன் பயோமெட்ரிக் சாதனங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் விவரங்கள் சமர்ப்பிக்க வேண்டும். ஆசிரியர்களின் செல்போன் எண், தொடர்பு முகவரிகள் சமர்ப்பிக்கப்பட்டதையும் உறுதி செய்ய வேண்டும். அவை ஆய்வின் போது சரிபார்க்கப்படும். ஆசிரியர் தகுதிகள், அனுபவம், ஊதிய அளவு மற்றும் பணியாளர் விகிதம் போன்ற விதிகள் பின்பற்றப்பட்டு இருக்க வேண்டும்.

இதுதவிர என்ஐஆர்எப் தரவரிசை எண் மற்றும் சான்றிதழ்கள், முந்தைய 3 ஆண்டுகளுக்கான வருடாந்திர செலவு விவரங்கள், மாணவர்களின் விவரங்களையும் பதிவேற்ற வேண்டும். அனைத்து தகவல்களையும் சமர்பித்த பிறகு, அதை நகலாக எடுத்து பராமரிக்க வேண்டும். பல்கலைக்கழகம் கேட்கும்போது எல்லாம் அதை கொடுக்கும் வகையில் தயாராக வைத்திருக்க வேண்டும். யுஜிசி மற்றும் ஏஐசிடிஇ விதிகளின்படி 6 அல்லது 7வது சம்பளக்குழுவின் பரிந்துரையின்படி சம்பளம் கட்டாயம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலத்துக்குள் விவரங்களை சமர்ப்பிக்காத கல்லூரிகள் வரும் கல்வியாண்டுக்கான இணைப்பு அங்கீகாரத்துக்கு பரிசீலிக்கப்படாது. ஒவ்வொரு முதுநிலை பட்டப் படிப்புக்கும் பொருத்தமான துறையில் ஆராய்ச்சி பட்டம் பெற்ற பேராசிரியர் அல்லது இணை பேராசிரியர் கட்டாயம் இருக்க வேண்டும். இல்லையெனில் இணைப்பு அங்கீகாரம் நீட்டிக்கப்படாது.

ரத்து செய்யப்படும்: இணைப்பு அங்கீகாரத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட விவரங்களை பூர்த்தி செய்யாத படிப்புகள் எந்த அறிவிப்பும் இல்லாமல் இடைநிறுத்தப்படும் அல்லது ரத்து பெறப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. முன்னதாக தனியார் பொறியியல் கல்லூரிகளில் போலி பேராசிரியர்கள் பணியாற்றி வருவதாக தெரிய வந்த நிலையில் விதிமுறைகளை கடுமையாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்து கழகங்களை சீரமைக்க வலியுறுத்தி சிஐடியு சார்பில் சிறை நிரப்பும் போராட்டம்

சென்னை, ஜன.24

போக்குவரத்துக் கழகங்களை சீரமைக்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் சிஐடியு சார்பில் சிறை நிரப்பும் போராட்டம் நேற்று நடைபெற்றது. சென்னை, பிராட்வே பேருந்து நிலையத்தில் நடைபெற்ற போராட்டத்துக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சம்மேளன (சிஐடியு) பொதுச்செயலாளர் கே. ஆறுமுகநயினார் தலைமை வகித்தார்.




சம்மேளன பொருளாளர் சசிகுமார், அரசாங்க போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் துரை, பொதுச்செயலாளர் தயானந்தம், பொருளாளர் பாலாஜி, மார்க்சிஸ்ட் தென் சென்னை மாவட்ட செயலாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளுடன் ஏராளமான தொழிலாளர்கள், ஓய்வூதியர்கள் பங்கேற்றனர்.

பேருந்து நிலையத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி அனைவரும் முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து பேருந்துகளை மறித்து நிலையத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அனைவரையும் போலீஸார் கைது செய்தனர். இதேபோல், தமிழகம் முழுவதும் 24 பேருந்து நிலையங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக ஆறுமுகநயினார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் சேவை நோக்கில், நஷ்டம் வரும் என தெரிந்தே 10 ஆயிரம் வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குகின்றன.

இதில் ஏற்படக்கூடிய இழப்பு சுமார் ரூ.45 ஆயிரம் கோடியை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு வழங்கவில்லை. இதனால் ரூ.30 ஆயிரம் கோடி கடன் வாங்கியும், தொழிலாளர்களின் பணம் ரூ.15 ஆயிரம் கோடியை செலவு செய்தும் நிர்வாகம் நடத்தப்படுகிறது. இவ்வாறு போக்குவரத்துக் கழகங்களை சீர்குலைக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

30 ஆயிரம் காலிப்பணியிடங்களை நிரப்பவில்லை. தொழிலாளர்களின் பணத்தை செலவு செய்ததால், ஓய்வுபெற்ற 8 ஆயிரம் பேருக்கு சுமார் ரூ.3,500 கோடி நிலுவை வழங்க வேண்டியிருக்கிறது. 9 ஆண்டுகளுக்கு மேலாக ஓய்வு பெற்றோருக்கு அகவிலைப்படி உயர்வு மறுக்கப்பட்டுள்ளது. வாரிசு வேலை கொடுக்கப்படவில்லை. ஊதிய ஒப்பந்த பேச்சு வார்த்தையையும் தொடங்கவில்லை.

**அமைச்சர் பேச்சில் முரண்:** பணியாளர்களை நியமிக்காமலேயே நியமிக்கப்படுவதாகவும், தனியார் மயத்தை முன்னெடுத்துவிட்டு தனியார் மயம் இல்லை என்றும் அமைச்சர் சொல்கிறார். அவரது சொல்லுக்கும் செயலுக்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. குறிப்பாக திமுக அரசு வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

போக்குவரத்துக் கழகங்களை சீரமைக்க வேண்டும் என முந்தைய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின், அப்போதைய அரசிடம் பட்டியல் ஒன்றை அளித்தார். அதை நிறைவேற்றக் கோரியே போராட்டம் நடத்துகி றோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மாலை தந்தி



# திருச்சியில் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம்



திருச்சி, ஜன.24

திருச்சியில் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திருச்சி மாவட்டம் மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நிறுவன தலைவர் ராஜேஷ் ஆலோசனைன்படி திருச்சி மாவட்டம்

புதன்கிழமை மாலை 6 மணி அளவில் பொதுச்செயலாளர் வீட்டில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் வரும் 26 குடியரசு தினத்தை முன்னிட்டு கோட்டார் பட்டியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு சில பரிசு பொருள்கள் வழங்கி குடியரசு தினத்தை கொண்டாடலாம் என்று முடிவு எடுத்து உள்ளனர்.

இதில் நிறுவன பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ், மாநிலத் துணை ஆலோசகர் பெஞ்சமின் மாநில மகளிர் அணி தலைவர் சுபா மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராணி மாநில மகளிர் அணி செயலாளர் பானுமதி, மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ஜான், திருச்சி மாவட்ட தலைவர் ராஜ்குமார், திருச்சி மாவட்ட துணை தலைவர் சந்திரா திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைத் தலைவர் காந்திமதி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைச் செயலாளர் யாஸ்மின் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராமு கலந்து கொண்டுள்ளனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் குடியரசு தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம்

சிவகங்கை ஜன24



சிவகங்கை மாவட்டத்தில் குடியரசு தினம் (26.01.2025) அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையை பின்பற்றி 26.01.2025 குடியரசு தினத்தன்று காலை 11.00 மணியளவில் அரசாணை (நிலை) எண் 130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்:25.09.2006ல் குறிப்பிட்டுள்ளவாறு குறைவெண் வரம் பின்படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

அன்றைய கிராமசபைக் கூட்டத்தில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 26.01.2025 குடியரசு தினத்தன்று காலை 11.00 மணி அளவில் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட்டு, அவ்வூராட்சியில் குடியரசு தினத்தின் கருப்பொருளினை பற்றி விவாதிக்கவும், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, கொசுக்கள் மூலம்பரவும் டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், மக்கள் திட்டமிடல் இயக்கம் (People's Plan Campaign) மூலம் 202526 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டம் ஆகிய கூட்டப் பொருட்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.


எனவே, 26.01.2025 குடியரசு தினத்தன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# ஜன.31ல் சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

சிவகங்கை ஜன24



சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 31.01.2025 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம், கூத்தம்பாக்கம் ஊராட்சி, வடகாத்திபட்டி கிராமத்தில், உங்களைத்தேடி உங்கள் ஊரில்'' திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன், குடியாத்தம் ஒன்றிய குழுத்தலைவர் சத்யானந்தம், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, குடியாத்தம் வட்டாட்சியர் மெர்லின் ஜோதிகா, ஒன்றிய குழு உறுப்பினர் ஆனந்தி நித்யானந்தம், ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஷ் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



மானாமதுரை இரயில்வே சந்திப்பு நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் பயணச்சீட்டு வழங்கும் இடம் முன்பு இருந்த வடமாநில இளைஞரை மானாமதுரை இருப்புப்பாதை சிறப்பு சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி தலைமையில் காவல்துறையினர் சோதனை செய்தபோது அவரிடமிருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா இருந்தது தெரியவந்தது. காவல்துறையினர் விசாரணையில் அவர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஆர்.தினாநாத் பூயான் (24) என்பது தெரியவந்தது. மேற்படி வடமாநில இளைஞர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.உடன் சார்பு ஆய்வாளர் வசந்தி, சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் தனுஷ்கோடி, தாமரை செல்வன், (தனி பிரிவு)எஸ்.பி.கே.ராஜா, காவலர்கள் சிங்கத்துரை, மீனாட்சி சுந்தரம், வினோத் ஆகியோர் உடனிருந்தனர்

# வீரர் வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச்சிலைக்கு அமைச்சர் பெரியகருப்பன் மாலை அணிந்து மரியாதை

சிவகங்கை ஜன24





சிவகங்கை மாவட்டம் நகரம் பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச் சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

அந்நிகழ்வுகளில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச்சிலைக்கு, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தெரிவிக்கையில்,

சுதந்திரப் போராட்டத் தியாகிகளை போற்றிடும் வகையிலும், அவர்களை கௌரவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், 200 ஆண்டுகளுக்கு முன்னதாக, நடந்துள்ள உண்மைச் சம்பவத்தை வெளிக்கொணருகின்ற வகையில், சுதந்திரப் போராட்டத்தில் தனது பங்களிப்பையும், தியாகத்தையும் முழுமாக அளித்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் புகழை உலகிற்கு பறை சாற்றுகின்ற வகையிலும், அதற்கு மெருக்கூட்டும் பொருட்டும், முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள், தன் பொன்மொழிகளால் வரலாற்று சிறப்புக்களை நூல்களாக பொறித்துள்ளார்.

அன்றைக்கு முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் விதைத்த விதையின் பயனாக, தமிழ்நாடு முதலமைச்சர் வாளுக்கு வேலி அம்பலம் புகழிற்கு வலுச்சேர்க்கின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டார்கள். அதன்படி, கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், வாளுக்கு வேலி அம்பலம் சிறப்பு சேர்த்திடும் வகையில், அன்னாருக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நகரம்பட்டியில் திருவுருவச்சிலை அமைக்கப்பதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் கடந்த 22.01.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டு, அப்பணிகள் இனிதே நிறை வுற்று, வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச்சிலை இன் றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் வரலாற்று சிறப்புமிக்க சிவகங்கை மாவட்டத்திற்கே நேரில் வருகை புரிந்து, கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது மேலும் சிறப்பிற்குரியதாகும்.

இதற்கான பெரும் முயற்சியில், நான் ஈடுபட்டதற்கான முழுப்பயனையும் அடைந்தமைக்கு, மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இதற்கான சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் செய்தித்துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். செய்தித்துறை அமைச்சர் காலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச்சிலை அமையப் பெற்றுள்ள நகரம்பட்டியில் நேரில் கலந்து கொண்டு, சிறப்பித்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து, நானும், மாவட்ட ஆட்சியரும் தற்போது, வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, அரசின் சார்பில் மரியாதை செலுத்தியுள்ளோம்.

மொழி, இனம், சுதந்திரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்கென பாடுபட்டவர்களை கௌரவிக்கின்ற வகையிலும், புகழை போற்றுகின்ற வகையிலும், அவர்களுக்கு நினைவகங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் திருவுருவச்சிலைகள் ஆகியவைகளை அமைத்து, எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொள்கின்ற வகையில், சிறப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் மேற்கொண்டு, தலைசிறந்த முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழந்து வருகிறார்கள் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வழக்கறிஞர் சிவ.கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரத்தில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம்

தாம்பரம் ஜன24



செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்களின் 108 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரத்தில் நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக பொருளாளர் தாம்பரம் கூட்டுறவு வங்கியின் முன்னாள் துணைத் தலைவர் பி.கே. பரசுராமன் தலைமையில் நடைபெற்றது.

பகுதி கழகச் செயலாளர் எல்.ஆர்.செழியன், எம்.கூத்தன், ஏ.கோபிநாதன் நிர்வாகிகள் டி.ஆர்.கஜா, ஏ.கோபிநாத், தனலட்சுமி, மார்க்கெட் என். காசி, எம்.வேலு, எஸ்.மாரி, மார்க்கெட் ஜி.பாபு ஆகியோர் வரவேற்பு உரையாற்றினார் வட்டக்கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள் எஸ்.ஜேசுராஜ், நாராயணசாமி, பாலகணேஷ், அக்பர் அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர் இக்கூட்டத்தில் கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் வி.வி.ஆர். ராஜ் சத்யன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா ஆகியோர் சிறப்புரையாற்றினார் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் எம்.சி.கிருஷ்ணன், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராம் மோகன், சீனு பாபு, மதுரபாக்கம் எம்பி.மனோகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கே.பி.காசி ராஜபாண்டியன், காஞ்சி மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் சபரீஷ் மணிகண்டன்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் செந்தில்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் பி.ஜி.ராஜ்குமார்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் வி.வினோத்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைத் தலைவர் ஏ.ஆர். ராஜசுந்தரன், 50வது வட்டக் கழக நிர்வாகிகள் மாரி, ஜெகதீஸ்வரன், அகரம் ஜானகிராமன், பொன்னுசாமி, ஜீவன் ஜீவா, முடிச்சூர் நிர்வாகி ஸ்ரீ பாஸ்கர் உட்பட மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் அணி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர் இந்த கூட்டம் முடிவில் 50வது வட்டக் கழக செயலாளர் பார்த்தசாரதி, வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் தாரா மேகம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்.

# குன்றத்தூரில் எம்ஜிஆர் 108 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம்

குன்றத்தூர் ஜன 24





குன்றத்தூரில் எம்ஜிஆர் 108 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டம் எம்ஜிஆர் 108வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் நிகழ்ச்சி மதனந்தபுரம் கே.. பழனி தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் வி.சோம சுந்தரம் அவர்கள் முன்னிலையில் குன்றத்தூர் பெரிய தெருவில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ப. மோகன், கழக அமைப்புச் செயலாளர் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் வாலாஜாபாத் பா.கணேசன், கழக அமைப்புச் செயலாளர், மைதிலி திருநாவுக்கரசு, தலைமைக் கழக பேச்சாளர் நெல்லையப்பன் பாலாஜி, காஞ்சி பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள் மாவட்ட, ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட எம்ஜிஆர் மன்ற நிர்வாகிகள், அம்மா பேரவை நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், மாவட்டம் மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு, மாவட்ட சிறுபான்மை பிரிவு, வட்டச் செயலாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்

இறுதியில் வரதராஜபுரம் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கோதண்டராமன் அவர்கள் ஏற்பாட்டில் மாற்றுக்கட்சியில் இருந்து விலகி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் விசோம சுந்தரம் மற்றும் குன்றத்தூர் ஒன்றிய கழக செயலாளர் மதனந்தபுரம் கே.பழனி முன்னிலையில் இணைந்து கொண்டனர்.

# தேனியில் அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள் விழா



தேனி, ஜன.24

தேனி மாவட்டம் அல்லிநகரம் அருகே பொம்மையக்கவுண்டன் பட்டியில் உள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மாவட்ட அலுவலகத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 128 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்விற்கு தேசிய மகளிரணி துணைப் பொதுச் செயலாளரும், மாநில பொதுச் செயலாளருமான லட்சுமி மாயாண்டி, மாவட்ட தலைவர் இரா.செந்தில்குமார்.மாவட்ட பொதுச்செயலாளர் மாயாண்டி, மாவட்ட இணை செயலாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர் நாகராஜ், மாவட்டத் துணைத் தலை வர் பசும்பொன் முருகன், தொழிற்சங்க தலைவர் மணிகண்டன், ஒன்றிய செயலாளர் ஆண்டவர் உட்பட கட்சி நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கூத்தம்பாக்கம் ஊராட்சி, வடக்காத்திபட்டி கிராமத்தில் “ உங்களைத்தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி புதிய அடையாள அட்டைகளை வழங்கினார். இந்த ஆய்வின்போது ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன், குடியாத்தம் ஒன்றிய குழு தலைவர் சத்யானந்தம், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, குடியாத்தம் வட்டாட்சியர் மெர்லின் ஜோதிகா, ஒன்றிய குழு உறுப்பினர் ஆனந்தி நித்யானந்தம், ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஷ், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், உள்ளி ஊராட்சியில், உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ் உள்ளி ஊராட்சியில் கால்நடை துறையின் சார்பில் நடைபெற்று வரும் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தொடங்கி வைத்து, கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகளை வழங்கினார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், ஒன்றிய குழு தலைவர் சத்யானந்தம், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு துறை) மரு. அந்துவன், குடியாத்தம் வட்டாட்சியர் மெர்லின் ஜோதிகா, அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், வளத்தூர் ஊராட்சியில், “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ் வளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்து, மாணவ, மாணவிகளின் வாசிக்கும் திறனை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், ஒன்றிய குழு தலைவர் இ.சத்யானந்தம், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி, குடியாத்தம் வட்டாட்சியர் மெர்லின் ஜோதிகா, அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளி கல்லூரி மகளிர் சுய உதவி குழுவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு! ஆட்சியர் ஆஷா அஜித் அறிவிப்பு

சிவகங்கை ஜன24

சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, பள்ளி, கல்லூரி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற நபர்களுக்கு ரொக்க பரிசு மற்றும் சான்றிதழ்களும், சிறப்பாகப் பணிபுரிந்த வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் (BLO), வாக்குச் சாவடி மேற் பார்வை அலுவலர்கள் ஆகியோர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதோர், Voter Helpline என்ற செயலியின் வாயிலாகவோ அல்லது https://www.nvsp.in, https://www.voters.



eci.gov.in என்ற வலைத்தளங்கள் மூலமாகவோ விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.

தேசிய வாக்காளர் தினம், வருகின்ற 25.01.2025 அன்று நாடு முழுவதும் கொண்டாடப் பட உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளி, கல்லூரி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது.

அவ்வாறு, நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வருகின்ற 25.01.2025 அன்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் ரொக்கப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளது. மேலும், சிறப்பாகப் பணிபுரிந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO), வாக்குச்சாவடி மேற் பார்வை அலுவலர்கள் ஆகியோர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு தொடர்ச்சியாக மனுக்கள் பெறப்பட்டு, தகுதி வாய்ந்த நபர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதோர் தங்கள் இருப்பிடங்களிலிருந்து Voter Helpline என்ற செயலியின் வாயிலாகவோ அல்லது https://www.nvsp.in, https://www.voters.eci.gov.in என்ற வலைத்தளங்கள் மூலமாகவோ விண்ணப்பித்து, பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# மத்திய மாநில அரசுகளுக்கு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருவாடானையில் ஐந்திணை மக்கள் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

திருவாடனை ஜன24

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானையில் 21.01.2025 அன்று ஐந்திணை மக்கள் கட்சியின் ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் தோழர் க.ஆறுமுகம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆளும் மத்திய மாநில அரசுகளுக்கு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும்

விவசாயிகளையும் உழைக்கும் மக்களையும் சீரழிக்கும் அரசின் பொதுப்பயன்பாட்டு அலுவலகங்கள் அதிகமுள்ள குருந்தங்குடி அரசு மதுபானக்கடையை இழுத்து மூட தமிழக அரசை வலியுறுத்தியும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்துப் பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை கண்டித்தும் உத்திர பிரதேச மாநிலம் சம்பால், ஞானவாதி இசுலாமிய வழிபாட்டுத் தலங்களை தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் இடிக்கத் துடிக்கும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்தும்

விவசாய நிலங்களை அழித்து மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தின் மூலம் கார்ப்பரேட் கம்பெனிகளுக்குத் துணை போகும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் விளிம்புநிலை மக்களின் சுயமரியாதைக்காகப் போராடிய சமூக சீர்திருத்தவாதியான தந்தை பெரியாரை



இழிவுடுத்திப்பேசிய நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமானைக் கண்டித்தும் பெரியார் பேரவையின் தலைவர் தோழர் நாகேசுவரன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் தோழர் பெரியார் முத்து, தமிழ்த்தேச மக்கள் முன்னணியின் தோழர் ஆரோக்கியமேரி, இ.இ. இளைஞர் மாணவர் இயக்கத்தின் தலைவர் பாவெல், உழவர் பாசறையின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் அழகர் சாமி, ஆதித்தமிழர் கட்சியின் தென்மண்டல செயலாளர் தோழர் பாஸ்கரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஐந்திணை மக்கள் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தோழர் வை.தேவதாசு, இணை ஒருங்கிணைப்பாளர் தோழர் ஆரோ.ஸ்டீபன்ராஜ், தமிழ்த் தேச மக்கள் முன்னணியின் தலைவர் தோழர் மீ.த. பாண்டியன் ஆகியோர் கண்டனப் பேருரையாற்றினர்.

மேலும் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் தோழர் கு.சந்திரசேகர், உழவர் பாசறையின் மாநிலச் செயலாளர் தோழர் ஜோசப், முகவை மாவட்டப் பொருளாளர் தோழர் இமானுவேல், மாவட்ட துணைத்தலைவர் தோழர் சார்லஸ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் சக்திவேல், மாவட்ட துணைத்தலைவர் தோழர் சேவியர், திருவாடானை ஒன்றியச் செயலாளர் தோழர் சேகர், ஒன்றியத் தலைவர் தோழர் சவரிமுத்து,

புதுக்கோட்டை மாவட்டத் தலைவர் தோழர் முத்து, ஆர்.மங்கலம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் தோழர் இளங்கோ, மாவட்டக்குழு உறுப்பினர்கள் தோழர் போஸ், தோழர் ஜோதிமணி, புதுக்கோட்டை மாவட்டக் குழு உறுப்பினர் தோழர் ஞானப்பிரகாசம், இளையான்குடி ஒன்றியச் செயலாளர் தோழர் அழகுராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, தமது இறுதிக் காலத்தில் ஐந்திணை மக்கள் கட்சிக்கு ஆலோசகராக விளங்கிய ‘சாதி ஒழிப்பு களப் போராளி’ தோழர் பூ.சந்திர போசு இரண்டாமாண்டு நினைவு நாளையொட்டி ஒரு நிமிடம் அகவணக்கம் செலுத்தப் பட்டது.இறுதியாக, கட்சியின் இராமநாதபுரம் மாவட்டத் தலைவர் தோழர் தைனேஸ் ராஜ் நன்றி கூறினார்.ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள், ஆதரவாளர்கள், குருந்தங்குடி, சம்பாநெட்டி பகுதியைச் சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்ட பெண்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

# மதுரை மாநகராட்சி “பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் வாகனம்” பயன்பாட்டிற்கு துவக்கி வைத்த மேயர் இந்திராணி பொன்வசந்த்

மதுரை: ஜன.24

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை வளாகத்தில் மண்டலம் 5க்கு உட்பட்ட வார்டு பகுதிகளில் பயன்படுத்துவதற்காக புதிதாக வாங்கப் பட்டுள்ள பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் வாகனத்தை மேயர் இந்திராணி பொன் வசந்த், ஆணையாளர் ச.தினேஷ் குமார், ஆகியோர் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள்.

மதுரை மாநகராட்சி 100 வார்டு பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணியின் கீழ் சாலைகள் அமைத்தல், பாதாள சாக்கடை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், தெருவிளக்குகள் பராமரித்தல், தூய்மை பணிகள், கால்வாய்கள் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட 100 வார்டு பகுதிகளில் உள்ள பாதாளச் சாக்கடைகளில் அடிக்கடி அடைப்புகள் ஏற்படுகிறது. இவ்வடைப்புக்களை சரிசெய்வதற்கு மாநகராட்சியில் கழிவுநீர் உறிஞ்சு வாகனங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சி மண்டலம் 5க்கு உட்பட்ட வார்டுபகுதிகளில் ஏற்படும் பாதாளச்சாக்கடை அடைப்புகளை உடனுக்குடன் சரிசெய்வதற்கு புதிய பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் வாகனம் (சுமார் 6000 லிட்டர்) 15th CFC 2022-2023 திட்டத்தின் கீழ் Truck Mounted Jetting Machine ரூ.63.48 லட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது. புதிதாக வாங்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் வாகனத்தை மேயர், ஆணையாளர் ஆகியர் பயன்பாட்டிற்கு இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இந்த புதிய வாகனம் மண்டலம் 5க்கு உட்பட்ட வார்டு பகுதிகளில் பயன்படுத்தப்பட உள்ளது.

இந்நிகழ்வில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் சுவிதா, உதவி ஆணையாளர் இராதா, செயற்பொறியாளர்கள் பாக்கியலட்சுமி, சேகர், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உதவி செயற்பொறியாளர் இந்திரா தேவி, உதவி பொறியாளர்கள் ரிச்சார்டு, அமர்தீப், உட்பட மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரயிலில் தவற விட்ட பெண்ணிடம் ஒப்படைத்த மானாமதுரை ரயில்வே போலீசார்

மானாமதுரை, ஜன.24

ஈரோடு மாவட்டம் நம்பியூரை சேர்ந்த ஜெயம்மாள் (64) என்பவர் நேற்று கோயம்புத்தூர் மண்டபம் ரயில் வண்டியில் முன்பதிவு செய்யப்பட்ட ஏசி இருக்கையில் காரைக்குடி பயணித்துள்ளர்.

அதிகாலை அளவில் காரைக்குடி ரயில் நிலையத்தில் இறங்கிய போது தான் கொண்டு வந்த மஞ்சள் பையை தவற விட்டுள்ளார். அந்த பையில் ரூ.5050 ரொக்கப் பணமும் ஒரு செல்போனும் இருந்துள்ளது.

இரவு நேர பணியில் இருந்த காவலர்களிடம் தகவல் தரவே மானாமதுரையில் சிறப்பு சார்பு ஆய்வாளர் தாமரைச்செல்வன் பயணி தவறவிட்ட மஞ்சள் பையை கைப்பற்றினார். இன்று காலை அளவில் மானாமதுரை இருப்பு பாதை காவல் நிலையத்தில் உரிமையாளர் ஜெய்யமாள் விடம் ஒப்படைக்கப்பட்டது. துரித நேரத்தில் செயல்பட்டு தனது பையன் மீட்ட காவலர்களுக்கு இரு கரங்கள் கூப்பி நன்றி தெரிவித்தார்.



மாலை தந்தி



# சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய முதலமைச்சர்

சிவகங்கை, ஜன.24

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிவகங்கை அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு வருகை தந்தார். அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம் அவர்களின் சொந்த நிதியில் 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அழகப்பா பல்கலைக் கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.







அதனைத் தொடர்ந்து, நேற்று மாலை காரைக்குடி, அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர், முதலமைச்சர் தலைமையில், சிவகங்கை மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் (22.1.2025) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள இலங்கை தமிழர்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவை கள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், 51 கோடியே 37 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 46 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 164 கோடியே 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 53,039 பயனா ளிகளுக்கு 161 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சிவகங்கை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் உரத்துப்பட்டி ஊராட்சி, கிழவயல் ஊராட்சிமணியாரம் பட்டி, உலகம்பட்டி ஊராட்சி, குன்னத்தூர் ஊராட்சி ஆகிய இடங்களில் 49 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

பிரான்பட்டி, சிங்கம்புணரி, மறமங்கலம், மருதங்கநல்லூர், நெஞ்சத்தூர், கங்கனி ஊராட்சி - உலக்குடி, திருப்பாச்சேத்தி ஊராட்சி - திருப்பாச்சேத்தி தெற்கு, கீழடி ஊராட்சி - பசியாபுரம், கானூர் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் 3 கோடியே 36 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள்;

வாரப்பூர் ஊராட்சி - குரும்பலூரில் 25 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக்கூடம், புழுதிப் பட்டி ஊராட்சி - மீனாட்சிபுரம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெற்குப்பை, கல்லல் ஊராட்சி ஒன்றியம் - அ. சிறுவயல் ஊராட்சி, கண்ணங்குடி ஊராட்சி ஆகிய இடங்களில்

2 கோடியே 73 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுகாதார நிலையக் கட்டடங்கள்;

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் - நாச்சான்குளம் ஊராட்சி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் - மேலப்பசலை ஊராட்சி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் - தெற்கு சந்தனூர் ஊராட்சி ஆகிய இடங்களில்

1 கோடியே 27 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி செயலகக் கட்டடங்கள்;

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் - திருவேகம்பத்தூர் ஊராட்சியில்

9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுயஉதவிக் குழுக்களுக்கான பணிமனை, கண்ணங்குடி ஊராட்சியில் 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோ லொகேஷன் சென்டர், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், வீரனேந்தல் ஊராட்சி - கிடாக்குழி கிராமத்தில் 13 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடம்;

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கொந்தகை ஊராட்சி - கட்டமன்கோட்டை கிராமம், ஓடாத்தூர் ஊராட்சி ஆகிய இடங்களில் 18 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள பொது விநியோகக் கடைகள், கல்லல் ஊராட்சி ஒன்றியம், கீழப்பட்டமங்கலம் ஊராட்சி - பெரிச்சிக்கோவில் முதல் தெற்கு நைனார்ப்பட்டி சாலை, சுண்ணாம்பிருப்பு வரத்துக் கால்வாயில் 4 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், மாரந்தை ஊராட்சி - கோரவலசை சாலை மாரந்தை கால்வாயில்

1 கோடியே 69 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள பாலம், மாரந்தை ஊராட்சிதளிர்தலை கிராமம், கோரவலசை சாலைமாரந்தை கால்வாயில் 3 கோடியே 27 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கீழடி ஊராட்சி, அருங்காட்சியகம் அருகில் ரூபாய் 24 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புற சோதனை சாவடி கட்டிடம் என 17 கோடியே 84 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகள்;

என மொத்தம் 164 கோடியே 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் 985 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மூன்று சக்கர சைக்கிள்கள், திறன்பேசிகள், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், மடக்கு சக்கர நாற் காலிகள், காதொலிக்கருவிகள், மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப் பட்டோருக்கான சிறப்பு நாற் காலிகள், கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 20,036 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், சமூக பாதுகாப் புத் திட்டத்தின் கீழ் 5512 பயனாளிகளுக்கு உதவித்தொகை, நலிந்தோர் உதவித் தொகை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 725 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 53,039 பயனாளிகளுக்கு 161 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கினார்.

இந்த விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி, எஸ்.மாங்குடி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஜிபே மூலம் 20 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய நகராட்சி டவுன் பிளானிங் அலுவலர் கைது

பரமக்குடி ஜன24

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் பதிவு பெற்ற பொறியாளர் பாரதி கண்ணன் தனது வாடிக்கையாளருக்கு சொந்தமாக பரமக்குடியில் உள்ள நான்கு வீட்டுமனைகளுக்கு நகராட்சியில் பிளான் அப்ரூவல் பெற கட்டணமாக ரூபாய் 76,850 ரூபாயை கடந்த வாரம் செலுத்தியுள்ளார்.



இந்த நிலையில் இது தொடர்பாக நகராட்சியில் டவுன் பிளானிங் அலுவலராக பணிபுரியும் பர்குணனை சந்தித்து பாரதி கண்ணன் விவரம் கேட்ட பொழுது ஒரு வீட்டு மனைக்கு ரூபாய் 5000 வீதம் நான்கு வீட்டுமனைக்கு மொத்தம் 20 ஆயிரம் ரூபாய் லஞ்சமாக வேண்டுமென கூறியுள்ளார். அதற்கு பொறியாளர் நகராட்சிக்கு கட்ட வேண்டிய அரசு பணத்தை முழுவதும் செலுத்தி உள்ளேன் ஆகையால் 20000 ரூபாய் லஞ்சம் கொடுக்க முடியாது என கூறியுள்ளார் இந்த நிலையில் பாரதி கண்ணன் ராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் செய்தார்.

இதனை தொடர்ந்து இன்று GPAY மூலம் பர்குணன் அலைபேசி எண்ணிற்கு 20,000 ரூபாய் லஞ்சப் பணம் அனுப்பிய பொழுது லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார்கள் பர்குணனை செல்போனுடன் கையும் களவுமாக பிடித்து கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.



மக்களை நாடி அவர்களின் குறைகளை தீர்க்க தமிழ்நாடு அரசின் உன்னத திட்டமான உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சாத்தான்குளம் வட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் மற்றும் காலையில் மேற்கொண்ட கள ஆய்வின் குறிப்புகள் குறித்து மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனை ஆய்வு கூட்டம் நடைபெற்றது.



உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் தேனி தாலுகா அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர் வி ஷஜீவனா பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா ஜெயபாரதி பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்துமாதவன் உள்ளிட்ட அதிகாரிகள் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் நீதிமன்றம் மேல சாக்குளம் கடம்பன்குளம் மேல மானாங்கரை மரவெட்டி ஆகிய கிராமங்களை இணைக்கும் பேருந்து நிறுத்தம் மற்றும் பயணியர் நிழல் குடை அமைக்க மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பூமி பூஜை செய்யப்பட்டது இதில் மாநிலங்களவை உறுப்பினர் மாவட்ட செயலாளர் தர்மர் மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் முத்துச்சாமி முன்னாள் மாவட்ட அரசு கூடுதல் வழக்கறிஞர் நோட்டரி பப்ளிக் அட்வகேட் அழகர்சாமி தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் ஏனாதி பா. வெற்றி முருகன் மாவட்ட பிரதிநிதி பொசுக்குடி ராஜேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கிராம மக்கள் சார்பாகவும் சமூக ஆர்வலர்கள் சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# பள்ளிக் கல்வித்துறை சார்பாக திண்டுக்கல்லில் வைகை இலக்கியத் திருவிழா

திண்டுக்கல், ஜன.24

திண்டுக்கல் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலக இயக்ககம் சார்பில் "வைகை இலக்கியத் திருவிழா"வை மாவட்ட ஆட்சித்தலைவர் மொ. நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம் முன்னிலையில் திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ. பொறியியல் கல்லூரியில் தொடங்கி வைத்தார்.





விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது:

திண்டுக்கல் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலக இயக்ககம் ஆகியவை சார்பில் வைகை இலக்கியத் திருவிழா 2025 திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் கல்லுரியில் நடைபெறுகிறது.

வைகை இலக்கியத் திருவிழாவானது, பண்பாட்டரங்கம், வரலாற்றரங்கம் ஆகிய இரண்டு அரங்கங்களுடன் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளன. மேலும், புத்தகக் கண்காட்சி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் புகைப்படக் கண்காட்சி மற்றும் ஓவியக் கண்காட்சி, இலக்கிய சொற்பொழிவுகள், கலந்துரையாடல், கவிதை பொழிவு, புகழ்பெற்ற எழுத்தாளர்களின் கதை, கட்டுரை மற்றும் நூல் திறனாய்வு, பரிசு வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. மேலும் வினாடி வினா போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

வைகை நதி பாயும் மாவட்டங்களைச் சேர்ந்த முக்கிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றவுள்ளனர்.

இலக்கியம் தான் ஒரு மனிதனை பண்படுத்தும். இளமைக்காலத்தில் இருந்தே மாணவ சமுதாயத்துக்கு தமிழ் மீதும், தமிழ் இலக்கியங்கள் மீதும் தீராத ஆர்வத்தை உருவாக்க வேண்டும்.

வைகை இலக்கியத் திருவிழா 2025 பொதுமக்களிடையை வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும், பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடைய இலக்கிய ஆர்வத்தை தூண்டவும் நடத்தப் பட்டு வருகிறது.

திண்டுக்கல் புத்தகத்திருவிழா தனித்துவம் வாய்ந்தது. இங்கு ஆண்டுதோறும் நடத்தப்படும் புத்தகத் திருவிழாக்களில் ஒவ்வொரு ஆண்டும் புத்தகங்களின் விற்பனை அதிகரித்துக்கொண்டே உள்ளது. வைகை இலக்கியத் திருவிழாவிற்கு வருகை தரும் மாணவ, மாணவிகள், பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இவ்விழா இப்பகுதிகளை சார்ந்த இலக்கியத்தை நேசிக்கின்ற மக்களுக்கு மிகப்பெரிய வாய்ப்பாக இருக்கிறது. இளைஞர்கள் இலக்கியத்துடன் உறவை மேம்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும். இந்த வாய்ப்பை மாணவ, மாணவிகள், பொதுமக்களும் நல்ல முறையில் பயன்படுத்தி இலக்கியத்தில் தங்களுடைய ரசனைகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என மாவட்ட ஆட்சியர் பேசினார்.

இக்கூட்டத்தில், பொது நூலக இயக்ககம் இணை இயக்குநர் ச.இளங்கோ சந்திரகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹா.சேக் முகையதீன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா.சக்திவேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மு.கோட்டைக்குமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ப.உஷா, துணை ஆட்சியர் (பயிற்சி) ராஜேஸ்வரிசுவி, மாவட்ட நூலக அலுவலர் இரா.சரவணக்குமார், மாணவ, மாணவிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161